# அருள்மிகு சிவன் கோவில்
# சைவத் தமிழ்ச் சங்கம்

www.sivankovil.ch www.anpesivam.com www.sivantv.com

## 11வயது பிரிவு

- தேவார மனனப்போட்டி.

பண் : புறநீர்மை

**தாயினு நல்ல தலைவரென் றடியார் தம்மடி போற்றிசைப் பார்கள்**
**வாயினும் மனத்தும் மருவிநின் றகலா மாண்பினர் காண்பல வேடர்**
**நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி நுழைதரு நூலினர் ஞாலம்**
**கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமா மலையமர்ந் தாரே.**

பொழிப்புரை:

தாயைவிட நல்ல தலைவர் என்று அடியார்கள் சிவபெருமானின் திருவடிகளைப் போற்றிப் பாடுவர். அவர் அடியார்களின் வாயிலும், மனத்திலும் நீங்காத மாண்புடையவர். பல கோலங்களை உடையவர். தம்மை வழிபடும் தொழிலுடைய அடியவர்கள்பால் நோய், பிணி முதலியன தாக்காவண்ணம் காப்பவர். மார்பில் முப்புரிநூல் அணிந்தவர். இவ்வுலகில், திருக்கோயிலும், சுனையும் கடலுடன் சூழ விளங்கும் திருக்கோணமாமலையில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.

**அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்**
**பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை**
**என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற**
**இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.**

பொழிப்புரை:

பேரின்பவீடு நல்கும் தில்லைத் திருச்சிற்றம்பலம் பொன்னுலக வாழ்வையும் தரும். இத்தகைய திருச்சிற்றம்பலத்தை, மேலும் இந்நிலவுலகில் என் அன்பு பெருகும் வகையில் கண்டு, பரமுத்திப் பேரின்ப நிலையை எளிதின் எய்துதற்கு இந்த நல்ல மனிதப் பிறவியை இன்னும் கொடுக்குமோ முதல்வன்?

- திருவாசக மனனப்போட்டி.

**பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்**
**பரிந்துநீ பாவியே னுடைய**
**ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி**
**உலப்பிலா ஆனந்த மாய**
**தேனினைச் சொரிந்து புறம்புறத் திரிந்த**
**செல்வமே சிவபெரு மானே**
**யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவ தினியே.**

.

பொழிப்புரை:

பாலை, காலமறிந்து கொடுக்கின்ற தாயைக் காட்டிலும் மிகவும் அன்பு கொண்டு, நீ பாவியாகிய என்னுடைய உடம்பை உருக்கி, உள்ளத்தில் ஞானத்தை பெருக்கி, அழியாத இன்பமாகிய தேனைப் பொழிந்து நான்கு புறங்களிலும் உடன் திரிந்த அருட்செல்வமே! சிவபிரானே! நான் உன்னைத் தொடர்ந்து உறுதி யாகப் பற்றியுள்ளேன். நீ இனிமேல் எங்கே எழுந்தருளிச் செல்வது?.

**திருமாலும் பன்றியாய்ச்**
**சென்றுணராத் திருவடியை**
**உருநாம் அறியவோர்**
**அந்தணனாய் ஆண்டுகொண்டான்**
**ஒருநாமம் ஓருருவம்**
**ஒன்றுமில்லாற் காயிரம்**
**திருநாமம் பாடிநாம்**
**தெள்ளேணங் கொட்டாமோ.**

.

பொழிப்புரை:

திருமாலும் வராகவுருவங் கொண்டு நிலத்தைப் பிளந்து சென்றும் அறியாத திருவடியை யாம் அறிந்துய்யும்படி ஒரு அந்தணனாய் எழுந்தருளி எம்மை ஆண்டு கொண்டவனும், திரு நாமங்கள், வடிவங்கள் இல்லாதவனுமாகிய சிவபெருமானுக்கு ஆயிரம் திருப்பெயர்களைச் சொல்லி நாம் தெள்ளேணம் கொட்டுவோம்.

- திருமந்திர மனனப்போட்டி.

**நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்**
**வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்**
**ஊன்பற்றி நின்ற உணர்வுறும் மந்திரம்**
**தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே**

.

பொழிப்புரை:

பரவெளியைப் பற்றிநிற்கின்ற வேதப் பொருளை உள்ளவாறு உணர்ந்து சொன்னால் அதுவே, “உடம்பைப் பற்றி நிற்கின்ற உயிருணர்வில் நிலைத்துநிற்கும் மந்திரம்“ எனப்படும். அம்மந்திரத்தை இடையறாது உணர உணரப்பேரின்பம் கிடைப்பதாம். அவ்வாற்றால் நான்பெற்ற இன்பத்தை, இவ்வுலகமும் பெறுவதாக.

**அவனை ஒழிய அமரரும் இல்லை**
**அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை**
**அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை**
**அவனன்றி ஊர்புகு மாறறி யேனே.**

பொழிப்புரை:

சிவபெருமானைத் தவிர இறவாதவர் பிறர் இல்லை அவனை உணராது செய்யும் செயல் சிறந்த தவமாதல் இல்லை அவனது அருளின்றி மும்மூர்த்திகளால் யாதொரு செயலும் நடவாது. அவனது அருளின்றி முத்திக்கு வழி இல்லை.

- **திருக்குறல்** **மூன்றாம் அதிகாரம்**

- **பேச்சுப்போட்டி** **“திருக்கோணேச்சரம்”** சுயதேடல்.

**அன்பார்ந்த பெற்றோர்களே!**

**உங்கள் பிள்ளைகளை இப்போட்டிகளில் பங்குகொள்ள வைப்பதன் மூலம் பிள்ளையின் தமிழறிவு, சமயஅறிவு, பண்பாடு, தமிழ் சமூகத்துடனான தொடர்பு என்பன வளர்ச்சியடையும். எனவே பரிசில்களை விட பங்குபற்றும் திறமையும், ஆர்வமும் மேலானது.**